பெருநகர சென்னை மாநகராட்சி

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 208 **நாள்**: 09.08.2025

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தனியார் மயமாக்கல் முறையை பின்பற்றி, சேவையின் தரத்தை உயர்த்துவதுடன் பணியாளர்களின் நலனையும் உறுதி செய்யும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. 2020 ஆம் ஆண்டு முதல், பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில், 10 மண்டலங்கள் மற்றும் மண்டலம் 7ல் உள்ள 3 வார்டுகளும் தனியார் நிறுவனங்களின் வழியே செயல்பட தொடங்கின.

இதனுடன் சேர்த்து, தற்போது மண்டலம் 5 மற்றும் 6ல் மேற்கொள்ளப்பட்டு வந்த தூய்மைப் பணிகள் ராம்கி நிறுவனத்திற்கு (CESPL) ஒப்படைக்கப்பட்டு 21.07.2025 முதல் அந்நிறுவனம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த 01.08.2025 முதல் மண்டலம் 5 மற்றும் 6ல் சுய உதவிக் குழுக்கள் மூலம் பணிபுரிந்து வந்த தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் ராம்கி நிறுவனத்தில் பணியில் சேராமல் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

ராம்கி நிறுவனம் ஒப்பந்தப்படி, மொத்தம் 3809 தூய்மைப் பணியாளர்கள் பணியில் நியமிக்க வேண்டும் தற்போது வரை 1770 பணியாளர்களை ராம்கி நிறுவனம் பணி அமர்த்தியுள்ளது. இது நாள் வரை பணிபுரிந்து வந்த மண்டலம் 5 மற்றும் 6ஐ சார்ந்த சுய உதவிக் குழுக்களின் தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியால் போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில், ராம்கி நிறுவனத்தில் மீதமுள்ள 2039 பணியாளர் இடங்கள் மண்டலம் 5 (975 பேர்) மற்றும் மண்டலம் 6ல் (1059 பேர்) பணிபுரிந்த சுய உதவி குழுக்களின் தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்காக பெருநகர சென்னை மாநகராட்சி அறிவுறுத்தலின்படி அந்நிறுவனத்தாரால் ஒதுக்கப்பட்டுள்ளது. இன்று 09.08.2025 முதல், மண்டலம் 5 மற்றும் 6ல் பணிபுரிந்த சுய உதவிக்குழுக்களின் தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் ராம்கி நிறுவனத்தில் (CESPL) தங்களுடைய விருப்ப கடிதத்தை கொடுத்து பணியில் சேர்ந்த வண்ணம் உள்ளனர்.

**செய்தி வெளியீடு** : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி